**சம்மாந்துறை பிரதேச சபை,**
**அம்பாரை மாவட்டம்.**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 மார்ச் 06 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக் மற்றும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 2020 மே 29 ஆந் திகதி பிரதேச சபை தவிசாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து சம்மாந்துறை பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் நிதிநிலைமையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலையை தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

### (அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (i) வருடாந்த பொருட் கணக்கெடுப்பு சபை அறிக்கையின் பிரகாரம் 2017, 2018 மற்றும் 2019 ஆண்டில் ஏலவிற்பனை செய்யப்பட்ட மற்றும் அழிக்கப்பட்ட அலுவலக தளபாடங்கள், உபகரணங்கள் மற்றும் நூலகப்புத்தகங்களின் கிரயம் கணக்குகளிலிருந்து பதிவழிக்கப்பட்டிருக்கவில்லை. | ஏலவிற்பனை செய்யப்பட்ட மற்றும் அழிக்கப்பட்ட பொருட்களின் கிரயத்தினை கணக்குகளிலிருந்து பதிவழித்தல் வேண்டும். | நூலகப் புத்தகங்களின் கிரயங்கள் கணக்குகளிலிருந்து பதிவழிக்க நடவடிக்கை எடுக்கப்படும் அதே வேளை அலுவலகத் தளபாடங்கள், உபகரணங்கள் என்பவற்றினைப் பதிவழிப்பதற்காக நிலையான சொத்துப் பதிவேட்டினை பூரணப்படுத்துகின்ற நடவடிக்கை பூரணப்படுத்தப்பட்டவுடன் இப் பொருட்களின் கிரயங்கள் நிலையான சொத்துக் கணக்குகளிலிருந்து பதிவழிக்கப்படும். |
| (ii) சபைக்கு நன்கொடையாக வழங்கப்பட ரூபா 200,000 பெறுமதியான காணி கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | காணி கணக்குகளிற்கு கொண்டு வரப்படல் வேண்டும். | இக் காணியின் பெறுமதி எதிர்வரும் நிதியாண்டில் காணிகளின் கீழ் நிலையான சொத்தாக காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (iii) ரூபா 948,717 தொகை நிதியளிக்கப்பட்டு நிர்மானிக்கப்பட்ட பொதுநூலக மலசலகூடம் கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | மலசலகூடம் கணக்குகளிற்கு கொண்டு வரப்படல் வேண்டும். | குறிப்பிட்ட வேலைக்கான கொடுப்பனவு குறிப்பிட்ட நிதி ஆண்டில் செய்யப்படாததனால் நிதிக் கூற்றுக்களில் காட்டப்படாது தவறுதலாக விடப்பட்டுள்ளது. இத் |

| | | |
|---|---|---|
| | | தவறு எதிர்வரும் நிதி ஆண்டில் நிவர்த்திக்கப்படும். |
| (iv) 2019 ஆண்டிற்கான விளம்பர பதாதைகளுக்கான கட்டணம் ரூபா.60,000 தொகை நிலுவையாக காட்டப்பட்டிருந்தும் நிதிக் கூற்றுக்களில் காட்டப்படவில்லை. | குறித்த நிலுவை நிதிக்கூற்றில் காட்டப்படல் வேண்டும். | இது தவறுதலாக விடப்பட்டுள்ளது. இதனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு விடயத்துக்குப் பொறுப்பான உத்தியோகத்தர் அறிவுறுத்தப்பட்டுள்ளார் இது எதிர்வரும் காலங்களில் நிவர்த்தி செய்யப்படும். |

**(ஆ) இணக்கம் செய்யப்படாத கணக்குகள்**

| இணக்கம் செய்யப்படாத கணக்குகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ஆதன வரி நிலுவை ரூபா 14,422,133 ஆக காணப்பட்டிருந்ததும் அதனோடு தொடர்புடைய பதிவேட்டின் பிரகாரம் ரூபா 21,366,064 காணப்பட்டமையினால் ரூபா 6,943,931 தொகை வித்தியாசப்பட்டிருந்தது. | உரிய மீதிகளின் வேறுபாடுகள் இணக்கம் செய்யப்பட்டு கணக்குகளை சரிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இத் திகதியில் உள்ள பதிவேட்டு நிலுவையானது சரி செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு அதற்கான வேலைகள் இடம் பெற்று வருகின்றன. இதனை நிவர்த்தி செய்வதற்கான இறுதித் திகதியாக 2020.07.06 ஆம் திகதி குறிக்கப்பட்டு விடயத்துக்கு பொறுப்பான உத்தியோகத்தருக்கு அறிவித்தல் கடிதம் வழங்கப்பட்டு அதற்கான வேலைகள் இடம் பெற்று வருகின்றது. |

**(இ) கணக்காய்விற்கு தேவையான எழுத்துமூல சான்றுகள் இல்லாதிருந்தமை**

| இணக்கம் செய்யப்படாத கணக்குகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 29,811,585 பெறுமதியான நிலையான சொத்து விடயங்களுக்குரியதாக காணி உறுதி, நிலையான சொத்துப் பதிவேடு, மெய்மையாய்வு அறிக்கைகள், உரிமைப் புத்தகங்கள், நூலகப் புத்தகப் பதிவேடுகள் மற்றும் விபரமான பட்டியல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப் பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | காணி உறுதிக்கான நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டு குறிப்பிட்ட நிறுவனங்களிலிருந்து ஆக்கபூர்வமான பதில்கள் கிடைக்கப் பெற்றதும் இக் குறைபாடு நிவர்த்தி செய்யப்படும். நிலையான சொத்துப் பெறுமதிகளை பதிகின்ற நடவடிக்கை முடிவுற்றதும் சமர்ப்பிக்கப்படும். விபரமான பட்டியல் பாதைகள், பொதுக் கிணறுகள் போன்றவற்றை நிலையான சொத்தாக நிதிக் கூற்றுக்களில் காட்டுவதிலுள்ள வியாக்கியானங்களின் நிமிர்த்தம் இவை நிலையான சொத்துக்களின் பட்டியலில் உள்ளடக்கப்படவில்லை. இனி வரும் காலங்களில் பாதைகளும், பொதுக்கிணறுகளும் நிதிக் கூற்றுக்களில் விபரமாகக் காட்டப்படும். |

## 1.4. இணக்கமின்மைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571 | இரண்டு ஆண்டுகளிற்கு மேற்பட்ட ரூபா1,184,366 பெறுமதியான 84 வைப்புக்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2015.12.31 ந் திகதி வரையான மீளப் பெறப்படாத சகல காலங் கடந்த வைப்புக்களும் வருமானத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. |

### 1.4.2 வரித் தேவைப்பாடுகளுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டில் அறவிடப்பட்ட பெறுமதி சேர்க்கப்பட்ட வரி ரூபா 260,154 தொகை உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு அனுப்பப்படாது வைப்பில் காட்டப்பட்டுள்ளது. | குறித்த காலப்பகுதிக்குள் அனுப்பதல் வேண்டும். | குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் உள் நாட்டு இறைவரித் திணைக்களத்தில் VAT Registration செய்தமைக்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்படாததனால் இத் தொகை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 7,466,546 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 10,943,411 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவைகள் | மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவைகள் |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 4,349,858 | 4,371,246 | 6,158,446 | 12,634,933 | 3,907,719 | 4,329,859 | 3,313,089 | 14,422,133 |
| வாடகைகள் | 31,006,570 | 26,206,228 | 26,232,708 | 8,451,541 | 20,271,858 | 20,361,397 | 20,873,137 | 8,478,021 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,300,000 | 1,625,550 | 1,625,550 | -- | 1,300,000 | 1,408,166 | 1,408,166 | -- |
| ஏனைய வருமானம் | 27,600,000 | 26,898,367 | 26,898,367 | -- | 20,640,000 | 22,315,754 | 22,315,754 | -- |
| | 64,256,428 | 59,101,391 | 60,915,071 | 21,086,474 | 46,119,577 | 48,415,176 | 47,910,146 | 22,900,154 |

### 2.2.2 சோலைவரி அறவீடு

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2013 ஏப்ரல் 26 ஆம் திகதிய 1,808 இலக்க இலங்கை சனநாயக சோசலிச குடியரசு வர்த்தமானப் பத்திரிகை அறிவிப்பின் மூலம் சபை எல்லைக்குட்பட்ட 22 கிராம சேவகர் பிரிவுகளுக்குள் புதிய ஆதனங்கள் மதிப்பிடுவதற்கு பிரகடனப்படுத்தப்பட்ட போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரை இவ்வாதன மதிப்பீட்டு வேலைகளானது பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த ஆதன மதிப்பீட்டு வேலைகளனை பூர்த்தி செய்து ஆதன வரியினை அறவிட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | குறிப்பிட்ட வர்த்தகமானிப் பிரகடணத்தின் பிரகாரம் 2018 ம் ஆண்டிருந்து ஆதனங்களுக்கு இலக்கமிட்டு இப் பணி 2019 ம் ஆண்டு August மாதம் முடிவுறுத்தப்பட்டு மட்டக்களப்பிலுள்ள பிரதம மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு ஆதனவரி மதிப்பீட்டு பணிகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. கௌரவ தவிசாளர் அவர்கள் பல முறை நேரடியாக விஜயம் செய்தும் மதிப்பீட்டுத் திணைக்களத்தில் நிலவும் ஆளனிப் பற்றாக்குறையின் காரணமாக தங்களால் உரிய நடவடிக்கை மேற்கொள்ள கால தாமதமாகும் என சுட்டிக்காட்டப்பட்டது. எனவே சபையின் வருமானத்தை கருத்திற் கொண்டு சபையில் கடமையாற்றும் வருமானப் பரிசோதரின் தலைமையில் குழு ஒன்று நியமிக்கப்பட்டு தற்காலிக மதீப்பிட்டு வேலைகள் நடைபெறுகிறது. |

### 2.2.3 குத்தகை வருமானம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 ஆம் ஆண்டு வரை குத்தகைக்காக வழங்கப்பட்ட இறைச்சிக்கடைகள் தொடர்பில் குத்தகை நிலுவை ரூபா.1,751,340 தொகையயினை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குத்தகை நிலுவை அறவீடு தொடர்பில் தொடர் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | 2015,2016,2017,2018 ம் ஆண்டுக்கான நிலுவை அறவீட்டிக்காக கல்முனை மாவட்ட நீதி மன்றத்தில் 06 வழக்குகளும் சம்மாந்துறை மத்தியஸ்தர் சபையில் 16 வழக்குகளும் இடம் பெற்று வருகின்றன. ஏனைய மாட்டிறைச்சி கடைக்காரர்கள் மாதாந்தம் ரூபா 10,000 செலுத்தி வருகின்றனர். |

**2.2.4 கடையறை வாடகை**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சம்மாந்துறை பொதுச்சந்தைக் கட்டிடம், ஹிஜ்ராபுரச் பொதுச்சந்தைக் கட்டிடம் மற்றும் பழைய மார்க்கட் கட்டிடம் மூலமான கடையறை வாடகை நிலுவைத் தொகைகள் முறையே ரூபா 1,002,281 , ரூபா 18,000, ரூபா 43,400 மற்றும் ரூபா 67,070 தொகைகள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | வாடகை நிலுவைகள் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | பட்டியல் தொகை கணிப்பீட்டில் காணப்பட்ட சில வழுக்களினாலும் மூடப்பட்ட கடைகளுக்கான கடை வாடகைகளின் சரியான நிலுவைத் தொகையினை கணிப்பிடுவதில் சில சிக்கல்கள் காணப்பட்டன தற்போது அவை நிவர்த்தி செய்யப்பட்டு நிலுவைத் தொகைகள் அறவீடு செய்யப்படுகின்றன. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம், பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வழிகள், மற்றும் மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1987 ஆம் ஆண்டின் 15 இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் பிரகாரம், பிரதேச சபையின் வருமானம் மற்றும் ஒழுங்கமைப்புக்காக முக்கிய விடயங்கள் தொடர்பில் உபவிதிகள் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத் தப்பட்டிருக்கவேண்டும். இருந்தும், பிரதேச சபையினால் 10 உப விதிகள் தொடர்பான பிரேரணைகள் கிழக்கு மாகாண உள்ளுராட்சி அமைச்சரின் அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்ட போதிலும், 2019 திசெம்பர் 31 வரையிலும் 04 உப விதிகள் தொடர்பில் அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை. | சட்டத்தின்படி முக்கிய உபவிதிகள் தயாரிக்கப்பட்டு அனுமதியினைப் பெற்று நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | உப விதிகள் தொடர்பான பிரேரணைக்கான அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்காக உரிய இடங்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தும் இது வரை அனுமதி வழங்கப்படவில்லை. இது தொடர்பாக தொடர்ச்சியாக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

### (ஆ) செயல் நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மேற்கொள்ளப்பட்ட 06 உப விதிகளின் பிரகாரம் சபையினால் செயல்படுத்தப்பட்டிருக்க வேண்டிய செயற்பாடுகள் தொடர்பில் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும். | அனுமதி பெறப்பட்ட 06 உப விதிகளுக்கு செயல் நடவடிக்கைத் திட்டமொன்றை தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | அலுவலக கட்டிடங்கள், பொது நூல் நிலையங்கள், பொதுச் சந்தைகள், பொது விளையாட்டு மைதானங்கள், பொது மையவாடிகள், எலும்பு அரைக்கும் ஆலையம், சிறுவர் பூங்காக்கள், சனசமூக நிலையங்கள் மற்றும் விலங்கு அறுமனை என்பன அமைந்துள்ள காணிகளின் உரிமத்தினை சபையின் பெயருக்கு மாற்றிக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உரிமைப் பத்திரங்களைப் பெற நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் | இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டு இனிவரும் காலங்களில் இவை சபையின் பெயருக்கு மாற்றப்படும். |
| (ஆ) | 2016 முதல் 2018 ஆண்டு வரையான காலப்பகுதிகளில் 08 நபர்களிடமிருந்து அறவிடப்பட்ட மேலதிய ஊழியர் நம்பிக்கை நிதிய பங்களிப்பு ரூபா 126,988 தொகையினை தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த மேலதிக அறவீடு தொடர்பில் உரிய நடவடிக்கை எடுத்தல். | இதனை சபையின் வருமானத்துக்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும் |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆளணி பட்டியல்களுக்கமைய, 14 பதவி வெற்றிடங்கள் நிரப்பப்பட்டிருக்காததுடன் 01 அபிவிருத்தி உத்தியோகத்தர் மேலதிகமாக ஆட்சேர்க்கப்படடிருந்தது. | குறித்த வெற்றிடங்களினை நிரப்புவதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | உரிய வெற்றிடங்களுக்கான உத்தியோகத்தர்கள் இதுவரையிலும் சபைக்கு இடமாற்றம் மூலமோ அல்லது நிரந்தர நியமனம் மூலமோ நிரப்பப்படவில்லை. இவற்றை நிரப்புமாறு பல முறை எழுத்து மூலம் உரிய அதிகாரிகளை கோரி உள்ளோம் அங்கிருந்து எமக்கு எவ்வித ஆக்க பூர்வமான பதில்களும் கிடைக்கப் பெறவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) 2013 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 15 ஊழியர்களிடமிருந்து நிலுவைகளாகக் காணப்பட்ட ரூபா 77,552 தொகையினை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கடன் மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | குறிப்பிட்ட ஊழியர்கள் கடந்த 10 வருடங்களுக்கு மேலாக சபையில் கடமையில் இல்லாதவர்களாகும். இவர்கள் காரியாலயங்களில் கடமையாற்றி வருகின்றார்களா or ஓய்வு பெற்றுச் சென்றுள்ளார்களா என்பதை கண்டறிந்து அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.4 பெறுகை**

**3.4.1 பெறுகைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது வழங்கல்களும் சாதனமும் மற்றும் பழுதுபார்த்தல் செயற்பாடுகளுக்காக ரூபா 23.4 மில்லியனும் மூலதனச் செலவுகளாக ரூபா 14.5 மில்லியனும் செலவு செய்யப்பட்ட போதிலும், பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட ல் வேண்டும். | இதற்குரிய பயிற்சி பெற்றவர்கள் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளதனால் இதனை தயாரிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. தற்போது பெறுகைத் திட்டம் தயாரிப்பதற்கான வேலைகள் முடிவுறும் நிலையை எட்டியுள்ளது. இனி வரும் காலங்களில் இத்திட்டம் வருடாந்தம் புதிப்பிப்பு செய்யப்படும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 தீர்க்கப்படாத கணக்காய்வு அவதானிப்புக்கள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) 1999 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்ட சபையின் ஹிஜ்ரா பொதுச் சந்தையில் உள்ள 84 கடைகளை வாடகைக்கு வழங்கியது தொடர்பில் கணக்காய்வுக்கு கிடைக்கப்பெற்ற எழுத்து மூல கூற்றின்படி இப்பொதுச் சந்தைக்கு அண்மித்துள்ள தனியார் கடைகள் குறைந்தது மாதாந்தம் ரூபா 6,000 தொடக்கம் ரூபா 20,000 வரையான வீச்சில் வாடகைக்கு வழங்கப்படுகின்ற போதிலும் சபைக்குச் சொந்தமான இக்கடைகள் புதிய விலை மனுக்களை கோராது மாதாந்தம் ரூபா.585 தொடக்கம் ரூபா 3,335 தொகை வரையான வீச்சில் வாடகைக்கு வழங்கிவருவதனால் சபை அண்ணளவான ரூபா 2,700,000 தொகையை வருடாந்தம் இழந்து வருகின்றது. | கடைகளின் வாடகைப்பெறுமதி மீள் மதிப்பீடு செய்யப்பட்டு வாடகை ஒப்பந்தம் புதுப்பிக்கப்பட்டு ஒப்பந்த நிபந்தனைகளுக்கு அமைவாக கடையறைகள் வழங்கப்படல் வேண்டும். | குறித்த கடைகளின் வாடகை மதிப்பீடு தொடர்பாக 2019.02.21 ம் திகதி மதிப்பீட்டு உத்தியோகத்தர்கள் சமூகம் தந்து மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இதன் அறிக்கை அவர்களிடமிருந்து இன்னும் கிடைக்கவில்லை அறிக்கை கிடைத்ததும் கடைகளின் மாதாந்த வாடகை கூட்டப்பட்டு வாடகை அறவீடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

| | | |
|---|---|---|
| (ஆ) முற்பணக்கொடுப்பனவுகள் தொடர்பாக தீர்ப்பனவு செய்யப்பட வேண்டிய ரூபா.580,277 தொடர்பில் உறுதிப்படுத்தக்கூடிய எந்தவிதமான ஆவணங்கள் இன்றியும் அத்தொகையினை தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படாமலும் 14 ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ச்சியாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டு வருகின்றது. | முற்பணக் கொடுப்பனவுகளை தீர்பனவு செய்யப்பட/ கணக்குகளிலிருந்து பதிவழிப்புச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இவை தொடர்பான ஆவணங்கள் இல்லாத காரணத்தினால் தீர்பனவு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. இதனை எதிர்காலத்தில் தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். |